தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 7 பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 செப்டம்பர் 23, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு”

தவறாது விளையும் விளைநிலங்களும், பொதுநலம் பேணும் சான்றோர்களும், குறைபாடு இல்லாத செல்வர்களும் ஒருங்குசேர்ந்து இருப்பதே நாடாகும்.

1. வினாக்கள் – விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 21, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

21—

புதிய கால்வாய்

***72104—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் பிரதான கால்வாய் செக்காணூரணி, புளியங்குளம் கால்வாயிலிருந்து வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் இந்த நிதியாண்டில் துவங்க அரசு முன்வருமா?

[2005 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் மறுபரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: மாண்புமிகு தங்கத் தாரகை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, திருமங்கலம் பிரதான கால்வாய் செக்காணூரணி, புளியங்குளம் வழியாக என்னுடைய தொகுதிக்கு ஒரு கிலோமீட்டர் அருகிலுள்ள வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம், அடைக்கம்பட்டி, முத்துப்பட்டி, ஆலம்பட்டி, தட்டானூர், ஒந்திமலை, பெருமாள்மலை ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் இந்த நிதியாண்டில் துவங்க அரசு முன்வருமா? மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு மாண்புமிகு எங்களுடைய அருமை அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், சென்னை, தலைமைப் பொறியாளர் அவர்களுடைய மதிப்பீட்டின்பேரில், 30-3-2003 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 816.50 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இப்பணியைத் துவங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அண்ணன் அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் பிரதான கால்வாய், செக்காணூரணி, புளியங்குளம் கால்வாயிலிருந்து வடபழஞ்சி கிராமம், கரடிப்பட்டி கிராமம், மேலக்குயில்குடி கிராமம், கீழக்குயில்குடி கிராமம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்க, மதுரை, பொதுப் பணித் துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம் மூலம் ரூ.113.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவிற்காக அனுப்பப்பட்டது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் 9–9–2005 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கண்மாய்களுக்கு பாசன வசதி, திருமங்கலம் நீட்டிப்பு பிரதான கால்வாயின்மூலம் வழங்குவது இயலாத நிலையில் உள்ளது என்பதால், இத்திட்டத்தைக் கைவிடலாம் என பரிந்துரை செய்துள்ளார். இருப்பினும், தலைமைப் பொறியாளர், மதுரை மற்றும் தலைமைப்

2005 செப்டம்பர் 23]

பொறியாளர் (திட்ட உருவாக்கம்) ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பை ஆராய்ந்து வருகின்றனர். அவர்களின் கருத்தினைப் பெற்று அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவேல்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அருமை அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

22—

பட்டா வழங்குதல்

*** 72755—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரம், ராஜாஜிபுரத்தில் நகராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் சுமார் 100 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் ஏழை, எளிய அருந்ததியர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம், ராஜாஜிபுரம் கிராமக் கணக்குகளில் வார்டு 'சி' பிளாக்–14, நகரளவை எண்கள் 36 முதல் 282 வரை உள்ள குடியிருப்புப் பகுதி. இப்பகுதி முழுவதும் நகரளவையில் தனி நபர்களின் அனுபோகத்தின்படி உட்பிரிவு செய்து மனைத் தீர்வை ஏற்படுத்தி பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இப்பகுதியில் நகரளவை எண் 34–ல் 4463.3 சதுர மீட்டர் பரப்பில், மனைத் தீர்வை பட்டா எண் 4976–ன்படி "ஆணையர், ஈரோடு நகராட்சி" என தாக்கலாகி உள்ளது. இதன் ஒரு பகுதியில் 75 குடும்பத்தினர் குடிசை போட்டும், வீடு கட்டியும் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர்.